மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திற்கு மார்ஷல் நேசமணி பெயர் சூட்ட ஆவன செய்ய வேண்டும்.

குமரி மாவட்டம், குழித்துறை உட்கோட்டத்திற்குச் சொந்தமான சாலையான அருமனை-பனிச்சமூடு 33/4 மீட்டர் அகலச் சாலையை அகலப்படுத்தி, பலப்படுத்தி இருவழிச் சாலையாக மாற்ற வேண்டும். தற்போது கொடுக்கப்பட்ட ஒப்பந்தம் வெறும் 20 mm*-க்குத்தான் போட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், மிகவும் மோசமான குழிகளுடன், பழுதடைந்து இந்தச் சாலை இருப்பதாலும், மழை அதிகம் பெய்யும் இடங்கள் என்பதாலும் இன்னும் சாலையை அதிக பலத்துடனும் போட அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

பேச்சிப்பாறை-கோதையாறு சாலை குண்டும், குழியுமாக உள்ளது. அதனைச் சீரமைக்க வேண்டும் மற்றும் மலையோரச் சாலைகளில் மரணக் குழிகள் உள்ளன. அதுமட்டுமல்லாது, குமரி மாவட்டத்தின் அனைத்துச் சாலைகளும், பிற மாவட்டச் சாலைகளும் சீரமைக்கப்பட வேண்டும்.

குமரியின் நீராதாரங்களான பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு அணைகளைத் தூர் வாரி, கரைகளைப் பலப்படுத்திச் சீரமைக்க வேண்டும்.

குமரியின் 2,050 குளங்கள் தூர்வாரப்பட்டும், குமரி விவசாயிகளின் ரத்த நாளங்களான பாண்டியன் கால்வாய், தோவாளை கால்வாய், சிற்றார் பட்டணங் கால்வாய், திற்பரப்பு வலது கரை, இடது கரைக் கால்வாய்கள், பி.பி. கால்வாய், என்.பி. கால்வாய் உட்பட அனைத்து கிளைக் கால்வாய்களின் கறைகள் பலப்படுத்தப்படவில்லை. கரைகளைப் பலப்படுத்தியும், உடைந்து பெயர்ந்து போன மடைகள், ஷட்டர்களை சீரமைக்கவும் அரசு ஆவன செய்ய வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, குழித்துறை, தாமிரபரணி ஆற்றில் தேங்காய்பட்டணம், முஞ்சிறை, அதங்கோடு, முளகுமூட்டுக் கடவு, விளாத்துறை அஞ்சாலிக்கடவு, திக்குறிச்சி ஆகிய பகுதிகளில் தடுப்பணை கட்டப்பட வேண்டும்.

குழித்துறை, தாமிரபரணி ஆறு வாவுபலி பொருட்காட்சி திடல் அருகே சுற்றுலாத் துறைமூலம் படகு குழாம் அமைக்க வேண்டும்.

குமரியின் சிறப்பு என்று முன்னோர்களால் கருதப்பட்ட ஏ.வி.எம். கால்வாயின் கழிவுகளை அகற்ற வேண்டும். அதனை மீண்டும் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும். அதில் படகுப் போக்குவரத்து ஏற்படுத்தவும், கடலிலிருந்து உப்பு நீர் உட்புகாமல் இருக்கவும், சுனாமி போன்ற நேரங்களில் அதில் உள்ள கழிவுகள், போன முறை நிகழ்ந்தது போல் மக்களுக்கு ஆபத்தாக ஆவதைத் தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏ.வி.எம். கால்வாய் சீரமைக்கப்பட வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, மேல்புறம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளாங்கோடு ஊராட்சி, சிதறால் மலைக்கோயிலைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டும்.

கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட நட்டாலம் ஊராட்சி, நட்டாலம் சிவன்கோவில், மறைசாட்சி தேவசகாயம் பிள்ளை பிறந்த இடங்களை ஒருங்கிணைத்து ஆன்மீக சுற்றுலாத் தலம் அமைக்கப்பட வேண்டும்.

குமரி மாவட்டத்தில் மார்த்தாண்டம், குழித்துறை, படந்தாலுமூடு, திருவட்டாறு ஆகிய பணிமனைகளிலிருந்து இயக்கப்படும் ஓட்டை, உடைசல், கைப்பிடி இல்லாத இருக்கைகள் மழை நேரங்களில் ஒழுகும் கூரையுடைய, மோசமான நிலையில் பயணம் செய்ய லாயக்கற்ற தகுதியில்லாத, பாதுகாப்பில்லாதப் பேருந்துகளை மாற்றிவிட்டு மத்திய அரசின் JNNURM திட்டத்தின்கீழ் நிதி பெற்று, புதிய பேருந்துகளைக் குமரி மாவட்டம் முழுவதும் இயக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

குமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் துறை, பள்ளம் துறை, விளவங்கோடு தாலுகா, வள்ளவிளை துறை, தூத்தூர் துறை, மார்த்தாண்டம்துறை ஆகிய கடற்கரையோரக் கிராமங்களில் மீன் இறங்கு தளங்கள், மீன் பதனிடும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வர வேண்டும்.

விளவங்கோடு தாலுகா, கடற்கரை ஓரமாக தேங்காய்பட்டணம்-இரயுமன்துறை இடையே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, கடையாலுமூடு பேரூராட்சி, திற்பரப்பு பேரூராட்சிகளை இணைக்கும்விதமாக கோதையாற்றின் குறுக்கே தெற்பக்கடவு பகுதியில் புதிய பாலம் கட்டப்பட வேண்டும்.